1975 மார்ச் 11]

(முற்பகல் 10-00)

5. பார்வையாளர் அனுமதிச் சீட்டு பெற்றவருக்கு அனுமதி மறுக்கப் பட்டது குறித்து.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: தலைவரவர்களே, நேற்றைய தினம் முதலமைச்சர் அவர்கள் பதிலுரை கூறினார்கள். அந்த உரையைக் கேட்பதற்காக எனது தொகுதியிலிருந்து இரண்டு பேர் வந்திருந்தார்கள். நான் அவர்களுக்கு சனிக்கிழமை அன்று 12 மணியிலிருந்து 1 மணி அளவிற்கு ஸ்பீக்கர் பாஸ் வாங்கியிருந்தேன். நேற்று அவர்கள் வந்த சமயத்தில் அவர்களை 11·55 மணி அளவில் வந்த அவர்களை, உள்ளே விட மறுத்திருக்கிறார்கள். எனக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய இரண்டாவது அனுபவம் என்று நான் கூறிக் கொள்கிறேன். இதற்கு முன்னாலும் இப்படி ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. இதனால் நான் எனது தொகுதி மக்கள் முன்னால் தலை குனியக் கூடிய அளவிற்கு இந்தச் சம்பவம் நடந்திருக்கிறது. ஆகவே இதைக் கண்டித்து நான் சபையை விட்டு வெளி நடப்பு செய்கிறேன்.

6. அரசினர் சட்ட முன் வடிவுகள்

(அ) தமிழ்நாடு 1975-ம் ஆண்டு கடன்பட்ட விவசாயிகள் (தற்காலிக நிவாரணம்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 7/1975)

THE HON. THIRU O. P. RAMAN: Sir, I beg to move—

"That the Tamil Nadu Indebted Agriculturists (Temporary Relief) Bill*, 1975 (L.A. Bill No. 7 of 1975) be taken into consideration.

In moving the Bill, I wish to say that there has been a widespread drought in this State and the agriculturists have borrowed debts in order to tide over the crisis caused by the failure of crops. It is in the interests of the general public that, at the present time, agriculturists should be spared the distractions and expenditure involved in litigation launched by their creditors and be enabled to rehabilitate themselves in order that the maximum possible advantage may result to the State in the matter of production of food crops.

---

* Published in the *Tamil Nadu Government Gazettee* Extrordinary, dated 8th March, 1975.